# தொழிலாளர் நீதிமன்றம், காஞ்சீபுரம்

**முன்னிலை. திருP.சிவஞானம், எம்.ஏ., எம்.எல்.,**
**தலைமை தாங்கும் அலுவலர்,**
**காஞ்சீபுரம்.**

2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 1ம் நாள் புதன்கிழமை

## I.A.No.03/2023, 04/2023
## IN
## I.D.No.13/2021

நிர்வாகம்,
Perfect Electric & Electronics,
எண்.4408, 17வது தெரு, விடுதலை நகர்,
S.கொளத்தூர்,
சென்னை- 600 129. ...... மனுதாரர்/எதிர்மனுதாரர்

/எதிராக/

D.ஞானசேகர்,
த/பெ.தாமோதரன்,
எண்.243, 6வது பிளாக், 9வது மெயின் ரோடு,
கண்ணதாசன் நகர்,
சென்னை - 600 118. ...... எதிர்மனுதாரர்/புகார்தாரர்

இம்மனுகள் கடந்த 14.02.2023 அன்று இறுதி விசாரணைக்காக இந்நீதிமன்றத்தில் வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.T.ஈஸ்வரதாஸ் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.D.ரமேஷ் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு இது நாள் வரையில் பரிசீலனையில் இருந்த பின் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## பொது உத்தரவு

1. I.D.13/2021 என்ற வழக்கை மறு திறப்பு செய்யவும், தொ.த.சா.1 சாட்சியை மேலும் குறுக்கு விசாரணை செய்வதற்காக மீண்டும் சாட்சியை வரவழைக்க அனுமதிக்க

வேண்டுமென்று கோரி தொழிற்தகராறு சட்டப்பிரிவு 11(3) and U/O18 R17 of CPC ன்கீழ் மனுதாரரால் இம்மனுகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## 2. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள இரண்டு இடைக்கால மனுக்களின் பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம்

மனுதாரர் தொழிற்தகராறு வழக்கில் எதிர்மனுதாரர். I.D.13/2021 வழக்கானது எதிர்மனுதாரர்/புகார்தாரரால் மனுதாரரிடம் மீண்டும் பணி வழங்க வேண்டும் பின்சம்பளம் வழங்கப்பட வேண்டும் என்ற பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால் 01.03.2019 தேதியில் எதிர்மனுதாரர் பணிக்கு வரவில்லை. அதன் பிறகு தன்னுடைய பணியை ராஜினாமா செய்துவிட்டார். மனுதாரர் தரப்பில் திருமதி. அருள்லதா என்பவர் தன்னுடைய முதல்விசாரணை சாட்சியத்தை அளித்துள்ளார். 09.01.2023 தேதியில் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணையும் செய்யப்பட்டுள்ளது. அப்போது பலவிதமான கேள்விகள் கேட்கப்பட்டது. மனுதாரர் தரப்பில் விசாரிக்கப்பட்ட நி.த.சா.1 சாட்சியத்திடம் எதிர்மனுதாரர் தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை அடிப்படையில் சில விளக்கங்கள் பெறுவதற்காக தொ.த.சா.1 திரு.ஞானசேகர் என்பரை மேலும் குறுக்கு விசாரணை செய்ய வேண்டியது அவசியமாக உள்ளதால் அவரை சாட்சியம் அளிக்க அழைக்க வேண்டும். எதிர்மனுதாரர் மனுதாரரிடம் தவறான நோக்கத்தில் பயன்களை பெறும் வகையில் வழக்கு தாக்கல் செய்திருப்பதால் மனுதாரர் தரப்பில் சில சங்கதிகளை நிரூபிக்க வேண்டியும், எதிர்மனுதாரர் பணி நீக்கம் செய்யப்படவில்லை என்ற சங்கதிக்காகவும் மேலும் வேறு இடத்தில் நல்ல பணி செய்து வருகின்றார் என்று நிரூபிப்பதற்காகவும் தொ.த.சா.1 சாட்சியம் விசாரணைக்காக அழைக்கப்பட வேண்டும். இதனால் காலதாமதம் ஏற்படும் என்று என்ன தேவையில்லை. இந்த மனுவை அனுமதிக்கப்படாத பட்சத்தில் மனுதாரருக்கு மிகுந்த கஷ்ட நஷ்டம் ஏற்படும். அதனால் வழக்கை மறு திறப்பு செய்து தொ.த.சா.1 சாட்சியை மேலும் குறுக்கு விசாரணை செய்வதற்காக மீண்டும் அழைக்க உத்தரவு செய்யப்பட வேண்டும்.

**3. <u>எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள இரண்டு மனுக்களுக்கும் பொதுவான எதிருரையின் சுருக்கம்</u>**

மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனு சட்டப்படியும், சங்கதிகள்படியும் நிலைக்கக்கூடியதாக இல்லை. மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் முழுமையாக மறுக்கப்படுகின்றது. ஏற்கனவே தொ.த.சா.1 சாட்சியத்தை 27.04.2022 மற்றும் 09.10.2022 ஆகிய தேதிகளில் முழுமையாக குறுக்கு விசாரணை செய்யப்பட்டதாக மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மனுதாரர் இந்த மனுவை அனுமதிக்க கூறும் காரணத்தை நிரூபிக்க ஆவண சாட்சியம் தாக்கல் செய்யப்படவில்லை. ஏற்கனவே வழக்கு வாதுரைக்காக ஒத்தி வைக்கப்பட்ட நிலையில் எதிர்மனுதாரர் தரப்பில் வாதுரைக்கு தயாராக இருக்கும் போது மனுதாரர் திடீரென்று விழித்துக்கொண்டு விடுப்பட்ட சங்கதியை பூர்த்தி செய்யும் வகையில் சட்டத்திற்கு புறம்பான வகையில் இந்த மனுக்களை தாக்கல் செய்துள்ளார். வழக்கு காலதாமதம் ஏற்படுத்தும் நோக்கத்தில் இந்த மனுக்களை தாக்கல் செய்திருப்பதால் இந்த மனுக்களை அனுமதிக்க தகுதி இல்லை. ஆகவே இந்த மனுக்களை தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

4. **மனுதாரர் கோரியவாறு இம்மனுகள் அனுமதிக்கக்கூடியதா ?**

5. **<u>தீர்வு</u>**

இரு தரப்பும் கேட்கப்பட்டது. மனுதாரருக்கு எதிராக எதிர்மனுதாரர் தொழிற்தகராறு வழக்கினை தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரர் பிட்டராக மனுதாரர் நிறுவனத்தில் வேலை செய்து வந்ததாகவும், எந்தவித காரணமுமின்றி வாய்மொழியாக பணி நீக்கம் செய்துவிட்டதாகவும், அந்த பணி நீக்க உத்தரவை ரத்து செய்து பின் சம்பளம் பணி தொடர்ச்சி மற்றும் இதர பயனகளுடன் மீண்டும் வேலை வழங்க மனுதாரர்/நிர்வாகத்திற்கு உத்தரவிட வேண்டுமென்று வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் எதிர்வழக்குரையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்/தொழிலாளி தரப்பில் தொ.த.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

நிர்வாகத்தரப்பில் நி.த.சா.1 ஆக அதன் இயக்குநர் திருமதி.அருள்லதா என்பவர் சாட்சியம் அளித்துள்ளார். அத்துடன் இருதரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு வழக்கு வாதுரைக்காக ஒத்தி வைக்கப்பட்ட நிலையில் மனுதாரர் இந்த மனுக்களை தாக்கல் செய்துள்ளார். நி.த.சா.1 சாட்சியிடம் எதிர்மனுதாரர் தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை அடிப்படையில் சில சங்கதிகளை நிரூபிக்க வேண்டி தொ.த.சா.1 திரு.ஞானசேகர் என்பவரை மீண்டும் குறுக்கு விசாரணை தொடர்பாக அழைக்கும் வகையில் வழக்கை மறு திறப்பு செய்ய வேண்டுமென்று இந்த இம்மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6. ஏற்கனவே 30.03.2022 தேதியில் தொ.த.சா.ஆ.1 ஆக ஞானசேகர் என்பவர் தன்னுடைய முதல் விசாரணைக்கான பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளார். தொ. த.சா.ஆ.1 முதல் 7 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. 27.04.2022 தேதியில் தொ.த.சா.1 சாட்சியத்திடம் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளது. 19.07.2022 தேதியில் தொழிலாளி தரப்பில் வேறு சாட்சிகள் இல்லை என்று முடிக்கப்பட்டது. அதன் பின்னிட்டு நிர்வாகத்தரப்பில் சாட்சிகள் விசாரிப்பதற்காக வழக்கு ஒத்திவைக்கப்பட்ட நிலையில் இந்த மனுதாரர் தரப்பில் இ.ம.எண்.1/2022,2/2022 என்ற இரண்டு இடைக்கால மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டது. அதில் தொ.த.சா.1 சாட்சியிடம் மேலும் சில விசாரணை செய்யப்பட வேண்டி இருப்பதால் வழக்கை மறு திறப்பு செய்து தொ.த.சா.1 சாட்சியத்தை மீண்டும் வரவழைக்க வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு இடைக்கால மனுக்களும் 28.09.2022 தேதியில் அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன் பிறகு தொ.த.சா.1 சாட்சியிடம் 19.10.2022 தேதியில் மனுதாரர் தரப்பில் கூடுதலாக குறுக்கு விசாரணை செய்து முடிக்கப்பட்டுள்ளது. அன்றைய தினம் நி.த.சா.ஆ.1 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

7. அதன் பின்னிட்டு 07.12.2022 தேதியில் நிர்வாகத்தரப்பில் அதன் இயக்குநர் அருள்லதா என்பவர் நி.த.சா.1 ஆக தன்னுடைய முதல் விசாரணை பதிவு செய்துள்ளார். நி. த.சா.ஆ.1 முதல் 5 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. 09.01.2023 தேதியில் நி.த.சா.1 சாட்சியிடம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை முழுமையாக

செய்யப்பட்டுள்ளது. அன்றைய தினம் தொ.த.சா.ஆ.8 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. 19.01.2023 தேதியில் மனுதாரர்/நிர்வாகத்தரப்பில் மேற்கொண்டு சாட்சிகள் இல்லை என்று முடிக்கப்பட்டுள்ளது.

8 ஏற்கனவே தொ.த.சா.1 சாட்சியிடம் விரிவாக குறுக்குவிசாரணை செய்யப்பட்ட பிறகு மேலும் சில விவரங்கள் குறித்து விசாரிக்கப்பட வேண்டுமென்று இந்த மனுதாரர் தரப்பில் I.A.1/2022,2/2022 ஆகிய இரண்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன்படி மனுதாரர் தரப்பில் தொ.த.சா.1 சாட்சியிடம் மேலும் குறுக்கு விசாரணை செய்து முடிக்கப்பட்டுள்ளது. அதன் பிறகு நிர்வாகத்தரப்பில் நி.த.சா.1 சாட்சியிடம் விசாரிக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்து முடிக்கப்பட்ட நிலையில் மீண்டும் தொ.த.சா.1 சாட்சியிடம் மேலும் சில குறுக்கு விசாரணை கேள்விகள் கேட்க இருப்பதாக மனுதாரர் தரப்பில் தெரிவித்து அதற்காக வழக்கு மறு திறப்பு செய்ய வேண்டுமென்று கேட்கப்பட்டுள்ளது. ஆனால் எந்த சங்கதிகள் சம்மந்தமாக மேலும் குறுக்கு விசாரணை செய்யப்பட வேண்டுமென்ற விவரம் மனுவில் குறிப்பிடப்படவில்லை. அதே போல் எந்தவிதமான ஆவணத்தையும் புதியதாக தாக்கல் செய்து இது குறித்த விளக்கம் கோருவதற்காக தான் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட வேண்டுமென்ற காரணம் எதுவும் மனுவில் தெரிவிக்கப்படவில்லை. ஏற்கனவே தொ.த.சா.1 சாட்சியை மீண்டும் வரவழைக்க வேண்டுமென்று கோரும் மனு அனுமதிக்கப்பட்டு விரிவான குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நிலையில் தற்போது வழக்கு வாதுரைக்காக நிலுவையில் இருக்கும் போது மீண்டும் வழக்கை மறு திறப்பு செய்ய வேண்டுமென்று கோருவதற்கும் தொ.த.சா.1 சாட்சியை மேலும் குறுக்கு விசாரணை செய்ய மீண்டும் அழைக்கப்பட வேண்டுமென்று கோருவதற்கும் சரியான காரணத்தை மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்படவில்லை. எதிர்மனுதாரர் தரப்பில் செய்யப்படும் ஆட்சேபனையின் அடிப்படையில் ஏற்கனவே இரண்டு நாட்கள் தொ.த.சா.1 சாட்சியிடம் விரிவான குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நிலையில் மேலும் குறுக்கு விசாரணை செய்வதற்காக புதியதாக காரணங்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை என்றும் நிர்வாகத்தரப்பில் சாட்சிகள்

விசாரணை செய்யப்பட்டு முடிக்கப்பட்ட நிலையில் நி.த.சா.1 சாட்சியிடம் எதிர்மனுதாரர் தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை அடிப்படையில் தொ.த.சா.1 யை மீண்டும் விசாரிக்க வேண்டுமென்று மனுதாரர் தரப்பில் கூறும் காரணம் சரி அல்ல என்றும் விடுபட்ட சங்கதியை பூர்த்தி செய்யும் வகையில் (fulfill the lacuna) மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதால் அனுமதிக்கக்கூடியதாக இல்லை என்று எதிர்மனுதாரர் தரப்பில் கூறும் காரணம் சரியானதாக உள்ளது. வழக்கு முடியும் தருவாயில் இறுதி நிலையில் உள்ள போது மீண்டும் வழக்கை மறு திறப்பு செய்து தொ.த.சா.1 சாட்சியை மேலும் குறுக்கு விசாரணை செய்ய அழைக்கப்பட வேண்டும் என்று கோருவதற்கு சரியான காரணங்கள் எதுவும் காணப்படவில்லை. எனவே இம்மனுக்களை அனுமதிப்பதற்கு போதுமான காரணங்கள் இல்லை என்பதால் தள்ளுபடி செய்ய முடிவு செய்யப்படுகிறது.

எனவே மேற்கூறிய காரணங்களின் அடிப்படையில் இம்மனுக்களை அனுமதிப்பதற்கு போதிய காரணங்கள் இல்லை என்று முடிவு செய்து தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரில் உரைக்கப்பட்டு, அவரால் சுருக்கெழுத்தில் எழுதி விரிவாக்கம் செய்து கணினி மூலம் தட்டச்சு செய்ததை பிழை திருத்தம் செய்து இன்று 2023ம் ஆண்டு மார்ச் மாதம் 1ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/- P.சிவஞானம்,
தலைமை தாங்கும் அலுவலர்,
தொழிலாளர் நீதிமன்றம்,
காஞ்சீபுரம்.

// உண்மை நகல் //

P SIVAGNANAM

Presiding Officer, Labour Court
Digitally signed by P SIVAGNANAM
Location: Kancheepuram
Date: 2023.03.01 16:52:42 +0530

தலைமை தாங்கும் அலுவலர்,
தொழிலாளர் நீதிமன்றம், காஞ்சீபுரம்.